14.08.2024 **Page No**.

**STC**.**No**.3464/2023

எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

அ.சா.1, முருகேசன் த/பெ. கந்தசாமி எம்.பி.எண்.17 /2024, தேதி 14.05.2024 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1.எங்களது நிறுவனத்திற்கும், எதிரிக்கும் 2014ம் ஆண்டிலிருந்து வரவு செலவு கணக்கு இருந்து வருகிறது என்றால் சரிதான். அ.சா.ஆ. 4 கடனுறுதிச் சீட்டு 21.10.2016 தேதி கொண்டது என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.5 காசோலையின் தேதி 24.10.2017 ஆகும். கடனுறுதிச் சீட்டின் தேதியும், காசோலையின் தேதியும் ஒரே தேதியில் இல்லாமல் வேறு வேறு தேதியில் உள்ளதால் நான் சொன்னவாறு எதிரி எங்களிடம் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அனுப்பியதாக சொல்லப்படும் அ.சா.ஆ.8 வழக்கறிஞர் அறிவிப்பானது எதிரிக்கு கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அ.சா.ஆ.8 திருப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பானது எதிரி முகவரி சரியாக இல்லை என்றுதான் திருப்பப்பட்டுள்ளதே தவிர எதிரி வாங்க மறுத்துவிட்டார் என்று திருப்பப்படவில்லை என்றால் எனக்கு நினைவில்லை. எனவே, வழக்கறிஞர் அறிவிப்பானது சட்டப்படியான காலத்திற்குள் எதிரிக்கு அனுப்பப்படவில்லை என்பதால் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

2. இதேபோல காசோலை மோசடி வழக்கு எதிரியின் மீது பெரம்பலூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எதிரியின் சொத்தை வழக்கு கடனுக்காக

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNKR020115982023/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com

நாங்கள் கிரையம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல, எதிரிக்கு கடன் கொடுத்த தேதிக்கு முன்பே கிரையமாக பெற்றதாகும். நாங்கள் பொதுமக்களுக்கு கடன் கொடுக்கும் நிறுவனம் நடத்துகிறோம். கவிகா பைனான்ஸ் என்னும் பெயரில் நிதிநிறுவனம் நடத்தி வருகிறோம். பொதுவாக கடன் கொடுக்கும் நிறுவனம் செக்கியூரிட்டிக்காக கடன் வாங்குபவரின் சொத்துக்களை கிரையம் பெறும் வழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கவிகா பைனான்ஸ் நிறுவனத்தின் பவர் ஏஜெண்ட் என்பதைக் காட்டுவதற்கு ஒரிஜினல் பவர் ஆப் அட்டானி அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி எங்கள் நிறுவனத்தில் வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும், நாங்கள் எதிரியிடமிருந்து அதிக வட்டியாக கந்து வட்டி, மீட்டர் வட்டி வாங்கவேண்டுமென்ற எண்ணத்தில் அவர் ஈடாக வைத்த ஆவணங்களை தர மறுத்து இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனவே, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNKR020115982023/truecopy/order-1.pdf